மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர் ஊராட்சி பகுதியிலுள்ள மாயனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு திட்டத்தின் மூலமாகவும், SSA மூலமாகவும் பல்வேறு கட்டடங்களை ஆண்டுதோறும் கட்டி வருகிறோம். மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப எங்கெங்கு தேவையிருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்கேற்ப கட்டடங்கள் கட்டித் தரப்பட்டு வருகின்றன. சில நேரங்களில், சில இடங்களில் புதியதாக கட்டடங்கள் கட்டியதற்குப் பிறகு மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது. இதையெல்லாம் அரசு ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளில் அதுபோன்ற நிலை இருக்கிறதோ அதை மனதிலே கொண்டு இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பள்ளியில் மாணவர்களினுடைய எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறது என்பதை உணர்ந்து, உடனடியாக நபார்டு திட்டத்திலே அதை இணைப்பதற்கு இந்த ஆண்டே அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

துணை மின் நிலையம்

***23782—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 1]

(அ) சீர்காழி தொகுதி, திட்டை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். ஒரு சாமானியருடைய ஆட்சி, நாடாளுமன்றப் பொதுத் தேர்தலோடு முடிந்துவிடும் என்று சொன்னவர்கள் மத்தியில், (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் சொன்னதைப் போல, எனக்குப் பின்னாலும் இந்தக் கட்சியும், ஆட்சியும் நூறாண்டு காலம் இருக்கும் என்பதை நிரூபிக்கின்ற வகையில் சிறப்பாகப் பணியாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிதான் தொடர வேண்டும் என்று மக்கள் தீர்ப்பளித்ததற்கு உறுதுணையாக இருந்து பிரச்சாரம் செய்து வெற்றியைத் தேடித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள சீர்காழி தொகுதி, திட்டை கிராமத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடம் கண்டறியப்பட்டிருக்கின்றது. அந்த இடம் ஊராட்சிக்குச் சொந்தமான இடமாக இருக்கின்றது. அதற்குண்டான விலைத் தொகைக்கான கோப்புகள் சுற்றிலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது காலதாமதம் ஆகும் என்று நினைத்தால், அவர் வேறு ஏதாவது இடம் கொடுப்பார் என்று சொன்னால், உடனடியாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். கல்லுக்குள் இருக்கும்*

தேரைக்கும் உணவளிப்பவன் இறைவன். கடைக்கோடியில் உள்ள தமிழனுக்கும் உணவளித்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) படபடவென பறந்து செல்லும் பட்டாம் பூச்சிக்கும் வரலாற்றில் இடம் தந்து, தமிழக அரசின் சின்னமாக அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய சீர்காழி நகரப் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட துணை மின் நிலையம் இது. அதை விரைந்து முடிக்க வேண்டும். அது நம்முடைய ஆற்றல் மிக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் மட்டும்தான் முடியும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை விரைந்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று ‘கஜா’ புயல் ஏற்பட்டபோது, நாகப்பட்டினம் மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அப்பொழுது நாங்கள் புதியதாக ஒரு கட்டமைப்பை உருவாக்க நினைத்து, ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று அதற்கான நிலத்தைத் தேர்வு செய்ய முயற்சி செய்தோம். சென்னை மாநகரத்தில்கூட இடம் எளிதிலே கிடைக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். ஆனால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் இடம் கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் சேர்ந்து இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பீர்கள் என்று சொன்னால், உடனடியாக துணை மின் நிலையம் அமைக்கப்படும். ஏற்கெனவே, நாகப்பட்டினம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அங்கே

மின்னழுத்தமும் குறைவாகத்தான் இருக்கின்றது. அதனால், அங்கே பல துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டும். ஆனால் அதற்குண்டான இடங்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. அதற்கென மணல்மேடு பகுதியில் கைத்தறித் துறையினுடைய இடம் எங்களுக்கு வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட கேட்டிருக்கின்றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வு செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இடத்தைக் கொடுக்கின்றபட்சத்தில் உடனடியாக அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் தேவைப்படும் இடமான திட்டை கிராமம், சீர்காழி நகரப் பகுதியை ஒட்டியிருக்கிறது. அதற்குண்டான முன் நுழைவு அனுமதியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இன்றைக்கு விலை நிர்ணயம் செய்கிற ஊரக வளர்ச்சித் துறையில் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய சீர்காழி தொகுதியிலே இருக்கின்ற குறைந்த மின்னழுத்தப் பகுதிகளான கடற்கரையைச் சார்ந்த பழையபாளையம், மாதானம், தாண்டவன்புரம், கொண்டல் போன்ற பகுதிகளுக்கு 33/11 கே.வி. துணை மின் நிலையங்களை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, திட்டை கிராமம், நகரத்தை ஒட்டிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் நிலத்தினுடைய மதிப்பு

அதிகமாக இருந்தாலுங்கூட நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கின்றோம். உள்ளாட்சித் துறையும் அதற்குண்டான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் உடனடியாக அங்கே இருக்கின்ற அதிகாரிகளோடு கலந்தாலோசித்து அதை வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் செய்து தருகின்றோம். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டமான நாகப்பட்டினம் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் புதைவடத் தடங்களாக மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். முதற்கட்டமாக, வேளாங்கண்ணி பகுதியிலே புதைவடத் தடம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறுகின்றபோது, சென்னையிலே சுலபமாக இடம் கிடைப்பதாக அறிவித்தார். 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறேன். "இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் ஒரு நல்ல அறிவிப்பை வெளியிடுவேன்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார். 3 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போதாவது அதற்குரிய positive ஆன பதிலை அளிக்க வேண்டும். பாரிமுனையில் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இடம் கிடைத்தாலும் அதன் விலை கொடுக்க முடியாத விலையாக இருக்கின்ற காரணத்தால் அமைக்க முடியாத நிலை இருக்கின்றது. ஆனால்,

2019 ஜூலை 1]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவல் துறைக்கு ஒப்படைத்த இடத்தை மாற்றித்தர வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். சட்ட நடைமுறைகள் சரியாக வராத காரணத்தால்தான் வேறு இடத்தை நாங்கள் தேர்வு செய்து கொண்டிருக்கின்றோம். காவல் துறை மறுக்கின்ற காரணத்தினால் வேறு இடத்தைத் தேர்வு செய்து கொண்டிருக்கின்றோம்; இடம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அநேகமாக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள் அந்த இடத்தைத் தேர்வு செய்துவிடுவோம் என்று நினைக்கின்றேன். இடத்தைத் தேர்வு செய்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உடனடியாக தகவல் சொல்கின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, மேலக்காவேரி கிராமம், ஏலகரம் கிராமத்தில் தனியாருக்குச் சொந்தமான சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும்பொருட்டு விலை நிர்ணயம் செய்வதற்காக வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், கல்லூர் வருவாய் வட்டம், வட்டியூர் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான மந்தைவெளிப் புறம்போக்கில் சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் ஆர்.எஸ். நெ. 308/1—ல் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டு, நிலத்தினை வகை மாற்றம் செய்வதற்காக வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதுகுறித்து இம்மாமன்றத்தில் 14—7—2014 மற்றும் 5—12—2014—ல், '2016—ல் மகாமகம் நடக்கும் நேரத்தில் செய்து தரப்படும்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருப்பதை நினைவுகூர்கிறேன். அடிக்கடி மின்தடையாலும், மின்னழுத்த ஏற்றத்தாழ்வுகளாலும் விவசாயப் பெருமக்களின் மின்மோட்டார்கள் பழுதடைந்து, மிகவும் துன்பத்திற்கும் பொருளாதாரக் குறைவிற்கும் ஆளாகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்மிகை மாநிலமாக இருப்பதாக இம்மாமன்றத்தில் அடிக்கடி சொல்லியிருக்கிற அந்தக் கூற்றை உறுதிசெய்கிற வகையில், மேலக்காவேரி மற்றும் கல்லூர் வட்டம், வட்டியூரில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வகை மாற்றம் செய்ய

வேண்டிய வருவாய்த் துறை பணிகளை விரைவுபடுத்தி துணை மின் நிலையம் அமைத்திட ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கேள்வியும் கேட்டு, பதிலும் சொல்லிவிட்டார்கள். ஏனென்று சொன்னால், அந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, இப்போது வருவாய்த் துறையினுடைய ஆய்வில் இருக்கின்றது. விலை மதிப்பீடு செய்வதற்காக அங்கே சென்றிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இதுதான் பிரச்சினை. இரண்டாண்டுக் காலமாக நாங்கள் சொல்கிறோம் என்று நீங்கள் தெரிவிக்கின்றீர்கள். உண்மை, நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், பல துறைகளின் வாயிலாக கோப்புகள் வருகின்றபோது காலதாமதம் ஆகிவிடுகின்றது. மந்தைவெளிப் புறம்போக்கு என்பது வகைமாற்றம் செய்ய வேண்டியதாக இருக்கின்றது. அதற்கு மாற்று இடம் கேட்கின்றார்கள். அதையெல்லாம் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சியர் கொடுக்கின்றபோது காலதாமதமாகிறது. அதனால்தான், நான் ஒவ்வொரு முறையும் சொல்கின்றேன், தனியார் இடத்தில் என்ன அரசு மதிப்பீடு இருக்கின்றதோ அந்த விலையைத் தருவதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கின்றது. அப்படி இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பீர்களென்று சொன்னால், நாங்கள் உடனடியாக துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'நீங்கள் அறிவித்து இரண்டாண்டு காலம் ஆகிவிட்டது, நடக்கவில்லை' என்று சொல்கிறீர்கள். உண்மைதான், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதற்குக் காரணம், பல அரசுத் துறைகளில் சம்பந்தப்பட்ட கோப்புகள் சுற்றி வருகின்றபோது பல சிக்கல்கள் வருகின்றன. மந்தைவெளிப் புறம்போக்கை வகைமாற்றம் செய்யும்போது, நீங்கள் வேறு இடங்களைக் கொடுங்கள் என்று சொல்கின்றார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் இருக்கின்ற காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அமைச்சர் அவர்கள் மின்மிகை மாநிலம் என்று அடிக்கடி சொல்லியிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள்.

2019 ஜூலை 1]

உண்மை, 2005–2006, 2015 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மின்மிகை மாநிலம் என்பது இன்றளவும் இருந்து கொண்டிருக்கின்றது. இதுபோன்று, என்றும் இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

சமுதாயக் கூடம்

***5955—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், இ. சித்தூர் ஊராட்சி, மொங்காம்பட்டி மற்றும் கோவிலூர் ஊராட்சி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் உருவாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், இ.சித்தூர் ஊராட்சியிலுள்ள மொங்காம்பட்டி கிராமத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் அதற்கருகில் உள்ள